**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர், நாள். 13.07.2021**

**2021**ம் ஆண்டு ஜீலை மாதம் **13.07.2021**ம் தேதி செவ்வாய் கிழமை மாலை **4.30** மணிக்கு நடைபெற்ற சாதராண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.தி.சகிலா, B.Com.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)** மனுதாரர் திரு.கமல்பாரத், த/பெ. ஸ்ரீமதுரபிரசாத் என்பவர் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**33**, புதுக்காலனி தெரு எண்.**1** மற்றும் புதுக்காலனி தெரு எண்.**6,7,8** –ல் சர்வே வார்டு –**7** ; பிளாக் எண்–**3**; நகரளவு எண்கள்–**52**; **57**/1A; 58; 59; 60; 91; 92/1; 96/1; 97/3A; -ல் கட்டுப்பட்டுள்ள **8.1** ஏக்கர் அளவுள்ள இடத்தினை குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக உத்தேசித்துள்ளதாகவும், மேற்படி நிலமானது அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாயப் பயன்பாட்டிற்கான நில உபயோகத்தில் அமைந்துள்ளதால், அதனை குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்றம் செய்ய கோரியுள்ளார். அதனடிப்படையில் கடந்த **31.01.2021** அன்று தமிழ் நாளிதழிலும் மற்றும் **02.012.2021** அன்று ஆங்கில நாளிதழிலும் **30** தினங்களில் பொது மக்கள் தங்களது ஆட்சேபனைகளை தெரிவிக்க விளம்பரம் மேற்கொள்ளப்பட்டதில். எவ்வித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. எனவே, அன்னாரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மனுதாரின் **8.1** ஏக்கர் அளவுள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாய நில உபயோகத்தில் அமைந்துள்ளது. மனுதாரின் இடத்திற்கு கிழக்கு பக்கம் **9.15** மீட்டர் அகல புதுக்காலனி தெரு எண். **6, 7, 8** –க்கு உரிய சாலையும், தெற்கு பக்கம் **9.10** மீட்டர் அகல புதுக்காலனி தெரு எண்–**1**க்குரிய சாலையும் அணுகு சாலையாக உள்ளது. மேற்படி இடத்தில் எவ்வித விவசாயமும் செய்யப்படாமல் தரிசாக உள்ளது. எனவே, விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்ற அரசின் ஒப்புதல் பெற்று மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.0365/2021/எப்2 )**
**தீர்மான எண் : 128** அனுமதி அனுமதிக்கப்படுகிறது.

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி.